**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**

Ang Mo Kio Tamil Methodist Church

**30th மார்ச் / March 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service**

| | | |
|---|---|---|
| ✝ | **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. மெல்பின்**<br>Mr. Melbin |
| | **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| | **ஜெபம்**<br>Prayer | **திரு. மெல்பின்**<br>Mr. Melbin |
| ✝ | **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**இயேசுவுக்கே ஒப்புவித்தேன்**

*1. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்*
*யாவையும் தாராளமாய்*
*என்றும் அவரோடு தங்கி*
*நம்பி நேசிப்பேன் மெய்யாய்*

**ஒப்புவிக்கிறேன், ஒப்புவிக்கிறேன்,**
**நேச ரட்சகா நான் யாவும்**
**ஒப்புவிக்கிறேன்**

*2. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்*
*அவர் பாதம் பணிந்தேன்*
*லோக இன்பம் யாவும் விட்டேன்*
*இப்போ தேற்றுக்கொள்ளுமேன்*

*3. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்*
*முற்றும் ஆட்கொண்டருளும்*
*நான் உம் சொந்தம், நீர் என் சொந்தம்*
*சாட்சியாம் தேவாவியும்*

*4. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்*
*நாதா அடியேனையும்*
*அன்பு பெலத்தால் நிரப்பி*
*என்னை ஆசீர்வதியும்.*

| | | |
|---|---|---|
| ✝ | **மாறி வாசித்தல் 13ம் ஞாயிறு**<br>"சங்கீதம் 34" | **சபையார் இணைந்து**<br>Congregation |

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்"

Psalter Reading - "Psalm 34"

| | | |
|---|---|---|
| ✝ | **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| | **துதி ஆராதனை**<br>Singspiration | |
| | **சாட்சியின் நேரம்**<br>Time of Testimony | |
| | **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| | **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ | **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை**

**கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை**
**கண்கள் கலங்கிடுதே**
**கர்த்தா உம் பாடுகள் இப்போதும் நினைத்தால்**
**நெஞ்சம் நெகிழ்ந்திடுதே**

*1. கெத்சமனே பூங்காவிலே*
*கதறியழும் ஓசை*
*எத்திசையும் தொனிக்கின்றதே*
*எங்கள் மனம் திகைக்கின்றதே*
*கண்கள் கலங்கிடுதே!*

*2. சிலுவையில் அறைந்து வதைத்தனரோ*
*உம்மை செந்நிற மாக்கினரோ*
*அப்போதும் அவர்க்காய் வேண்டினீரோ*
*அன்போடு அவர்களைக் கண்டீரன்றோ*
*அப்பா உம் அன்பு பெரிதே!*

*3. என்னையும் உம்மைப்போல் மாற்றிடவோ*
*உம் ஜீவன் தந்தீரென் இயேசுவே*

*எந்தனைத் தரை மட்டும் தாழ்த்துகிறேன்*
*தந்துவிட்டேன் அன்புக் கரங்களிலே*
*ஏற்று என்றும் நடத்தும்!*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***திருமதி. தெரேஸ் தேன்மொழி***
***லூக்கா 14 : 25 – 33*** — Mrs. Therese Thenmozhi
Scripture Reading
**Luke 14 : 25 - 33**

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

***<u>என்னை நேசிக்கின்றயா?</u>***

***என்னை நேசிக்கின்றயா?***
***என்னை நேசிக்கின்றாயா?***
***கல்வாரி காட்சியைக்கண்ட பின்னும்***
***நேசியாமல் இருப்பாயா?***

*1. வானம் பூமி படைத்திருந்தும்*
*வாடினேன் உன்னை இழந்ததினால்*
*தேடி இரட்சிக்க பிதா என்னை அனுப்பிடவே*
*ஓடிவந்தேன் மானிடனாய்.*

*2. பாவத்தின் அகோரத்தைப் பார்*
*பாதகத்தின் முடிவினைப்பார்*
*பரிகாச சின்னமாய் சிலுவையிலே*
*பலியானேன் பாவி உனக்காய்*

*3. பாவம் பாரா பரிசுத்தர் நான்*
*அழைக்கின்றேன் பாளி உன்னை பார்*
*உன் பாவம் யாவுமே சுமப்பேன் என்றேன்.*
*பாதம் தன்னில் இளைப்பாறவா,*

*4. உம்மை நேசிக்கின்றேன் நான்*
*உம்மை நேசிக்கின்றேன் நான்*
*கல்வாரி காட்சியைக் கண்ட பின்னும்*
*நேசியாமல் இருப்பேனோ!*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***லூக்கா 9 : 23***
Luke 9 : 23

***23. பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**